DEPOSITION OF WITNESS

CHAPTER ORDER XVIII CODE OF CIVIL PROCEDURE

IN THE COURT OF DISTRICT MUNSIF, AUNDIPATTI

O.S. No. 62 /2017

Deposition of Witness : PW1

| | | | |
|---|---|---|---|
| Name | : கோபால் | Father's/Husband's Name : கந்தசாமி | |
| Village | : கன்னியப்பபிள்ளைபட்டி | Taluk | : ஆண்டிபட்டி |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : 62 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 08.10.2025

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :**

**1)** வா.சா.ஆ.12 பவர் பத்திரம் குமரன், தங்கவேல் மற்றும் ராஜேந்திரன் ஆகியோர்கள் எழுதி கொடுத்த பவர் பத்திரத்தின் அடிப்படையில் இந்த வழக்கில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். மேற்படி பவர் பத்திரத்தின் அசல் ஆவணம் எங்கிருக்கிறது என்று கேட்டால் இந்த வழக்கில் தாக்கல் செய்திருக்கிறேன். மேற்படி ஆவணத்தின் அசலை O.S.No.138/2011 என்ற வழக்கில் தாக்கல் செய்யப்பட்டு அதன் நீதிமன்ற சான்றிட்ட நகலை தான் இந்த வழக்கில் தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரிதான். அந்த ஆவணத்தில் 2 லக்க சொத்துக்களுக்கு மேற்படி 3 நபர்களிடமிருந்து பவர் பத்திரம் எழுதி வாங்கியிருக்கிறேன் என்றால் சரிதான். அந்த ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள 1 வது லக்க சொத்து தான் குமரனுக்கு கிரையம் கொடுத்த சொத்து. 10.06.2003 ம் தேதியிட்ட பவர் பத்திரத்தின் அடிப்படையில் தான் குமரனுக்கு கிரையம் செய்து கொடுத்தேன் என்றால் சரிதான். அந்த பவர் ஆவணத்திலும் எனக்கு வழக்கு நடத்த மட்டுமே அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது என்றாலும் எனது முதல்வருக்காக நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க அதிகாரம் வழுங்கப்படவில்லை என்றாலும் சரியல்ல.

2) எனது வழக்குரையின் 7 வது பத்தியில் தாவா இடத்திற்கு அருகில் உள்ள சொத்தை அர்ஜுனன், பால்பாண்டி, சின்னமுத்து, தர்மர், வீரன் ஆகியோர் மீது O.S.No.138/2011 என்ற வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்து என்றால் சரிதான். வா.சா.ஆ.12 ஆவணத்தில் சொல்லப்பட்டுள்ள தங்கவேல் என்பவருக்கு பவர் ஏஜெண்டாக இருந்து மேற்படி வழக்கை நடத்தினேன் என்றால் சரிதான். மேற்படி அசல் வழக்கு கடந்த 13.02.2019 ம் தேதி முழுவிசாரணைக்கு பின்பு தள்ளுபடியாகிவிட்டது என்றால் சரிதான். மேற்படி வழக்கு சர்வே எண்.477/1B1 என் றசொத்து சுப்பையன்

என்பவருக்கு பாத்தியப்பட்டது என்பதற்கான ஆவணங்கள் இல்லை என்பதால் தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது என்று சொன்னால் சரிதான். மேற்படி சுப்பையன் என்பவரிடமிருந்து தான் தாவாசொத்துக்களும் கிரையம் பெறப்பட்டிருக்கிறது என்றால் சரிதான். மேற்படி வழக்கில் ஏற்பட்ட தீர்ப்புரையை நான் படித்து பார்த்தேன். மேற்படி வழக்கு எந்தெந்த காரணங்களுக்காக தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது என்ற விபரம் எனக்கு தெரியும். மேற்படி தீர்ப்புற்கு எதிராக நான் மேல்முறையீடு செய்யவில்லை என்றால் சரியல்ல. தாக்கல் செய்திருக்கிறோம், வழக்கு எண் தற்போது எனக்கு ஞாபகம் இல்லை.

3) நான் சொல்வது போல் மேல்முறையீடு எதுவும் தாக்கல் செய்யாததால் தான் எனக்கு வழக்கு எண் ஞாபகம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. தாக்கல் செய்திருக்கிறோம், வழக்கு எண் தற்போது எனக்கு ஞாபகம் இல்லை.வா.சா.ஆ.13 சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையின் WP(MD).No.8699/2011 என்ற வழக்கில் இந்த வழக்கில் உள்ள நபர்கள் தரப்பினர்களாக இல்லை என் றுசொன்னால் சரியல்ல, அவர்களுக்காகவும் தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். மேற்படி வழக்கில் இந்த வழக்கின் வாதிகளுக்காகவும் அந்த வழக்கை தாக்கல் செய்ததாக எந்த வாசகமும் இல்லை என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் இந்த வாதிகளுக்காக அந்த வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றாலும் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. சுப்பையன் என்பவருக்கு பாத்தியமில்லாத தாவா சொத்துக்களை பொறுத்து அவருடன் ஏற்படுத்திக்கொண்ட வா.சா.ஆ.6 மற்றும் வா.சா.ஆ.8 முதல் 10 ஆவணங்களும் அதனடிப்படையில் ஏற்படுத்திக்கொண்ட வா.சா.ஆ.11, 12 ஆவணங்களும் சட்டப்படி செல்லக்கூடியதல்ல என்று சொன்னால் சரியல்ல. சட்டப்படியான உரிமையாளிடம் இருந்து கிரையம் பெறாததால் மேற்படி ஆவணங்கள் இந்த பிரதிவாதிகளை கட்டுப்படுத்தாது என்று சொன்னால் சரியல்ல.

4) வா.சா.ஆ.6 மற்றும் வா.சா.ஆ.8 முதல் 12 உள்ள ஆவணங்களில் சொல்லியுள்ள நான்குமாலில் கட்டுப்பட்ட நிலம் புலத்தில் இல்லை என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதிகள் கிரையம் பெற்றுள்ள ஆவணத்தில் உள்ள நான்குமாலின்படி சொத்து சரியாக இருக்கிறது என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தை பிரதிவாதியின் கணவர் கருப்பத்தேவர் மதுரைத்துரை என்பவரிடம் 01.03.2010ம் தேதியில் கிரையம் பெற்று அனுபவித்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதிகள் கிரையம் வாங்கிய சொத்தும், வாதிகள் கிரையம் வாங்கிய சொத்து

வேறுவேறு என்று சொன்னால் சரியல்ல, ஒரே சொத்து தான். பிரதிவாதி கணவர் பெயரில் உள்ள கிரைய பத்திரத்தை நான் பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். அந்த கிரைய ஆவணத்தின்படி பிரதிவாதியின் கணவர் 3 லக்க சொத்துக்களை கிரையம் வாங்கியிருக்கிறார் என்றால் சரிதான்.

5) பிரதிவாதியின் கணவர் கிரையம் வாங்கிய 1வது லக்க சொத்தாக "ஆண்டிபட்டி கிராமம் வீட்டடி புஞ்சை அயன்சர்வே எண்.477/1 நம்பரில் ஏக்கர் 4 செண்டு 63 இதில் மேல்பக்கம் ஏக்கர் 1 செண்டு 85 இதில் கீழ்பக்கம் தற்கால யுடிஆர் சர்வே படி 477/1B ஏக்கர் 1 செண்டு 20 இதில் மேல்பக்கமிருந்து போடப்பட்டுள்ள 1வது பிளாட்டில் 1வது மனையடி இடம் செண்டு 6 இதில் தென்பக்கம் செய்டு 1ம், 2வது லக்கமாக மேற்படி சர்வே எண்ணில் கட்டுப்பட்ட 1வது பிளாட்டில் 2வது மனையடி இடம் செய்டு 4 உள்ள இடமும், 3வது லக்கமாக மேற்படி சர்வே எண்ணில் கட்டுப்பட்ட 1வது பிளாட்டில் 1வது மனையடி இடம் செண்டு 6ல் வடபக்கம் செய்டு 5 உள்ள இடம்" என குறிப்பிடப்படுள்ளது என்றால் சரிதான். ஆனால் அது வாதிகளுக்கு பாத்தியப்பட்ட சொத்து. மேற்படி கிரைய பத்திரத்தில் உள்ள நான்குமாலை நான்படித்து பார்த்திருக்கிறேன். அதில் உள்ள நான்குமாலும் வாதி சொத்திற்கான நான்குமாலும் வேறுவேறு.

6) அந்த ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள நான்குமாலில் தான் பிரதிவாதியின் கணவர் கிரையம் வாங்கிய சொத்து இருக்கிறது என்று சொன்னால் சரியல்ல. சர்வே எண்.477/1ல் கட்டுப்பட்ட மொத்த சொத்தான 4 ஏக்கர் 63 செண்டில் வடபக்கத்தில் செண்டு 76 ல் மேல்பக்கம் செண்டு 38ம், தென்பக்கத்தில் நடுமையம் செண்டு 76ல் மேல்பக்கம் செண்டு 38 சேர்த்து ஓர் வெங்கிடசாமிநாயுடு மகள் சரோஜினியம்மாள் என்பவரிடம் மேற்படி திருமலைமூப்பர் கடந்த 27.07.1972ம் தேதி கிரையம் பெற்று அனுபவித்து வந்தார் என்றால் சரிதான். ஆனால் அந்த சொத்து இந்த சொத்து இல்லை. மேற்படி திருமலை மூப்பர் அவருக்கு பாத்தியப்பட்ட சொத்தை அனுபவம் செய்துவந்து அவரது இறப்பிற்கு பிறகு அவரது வாரிசுகளான உண்ணாமலையம்மாள் மற்றும் மக்களான செல்வம், முருகதாஸ், லாரன்ஸ் மனைவி ருக்மணி ஆகியோர்கள் சேர்ந்து மற்ற மக்களான மணி, ஈஸ்வரன் ஆகியோருக்கு 16.07.1997ம் ஆண்டு பவர் பத்திரம் எழுதி கொடுத்திருக்கிறார்கள் என்றால் சரிதான். மேற்படி பவர் பத்திரத்தின்அடிப்படையில் மணி, ஈஸ்வரன் ஆகியோர் பிரதிவாதியின் கணவருக்கு 01.03.2010ம் தேதி கிரையம் கொடுத்திருக்கிறார்கள் என்றால் சரிதான்.

7) பிரதிவாதியின் கணவர் கிரையம் வாங்குவதற்கு முன்பு 24.04.1998 ல் மணி, ஈஸ்வரன் ஆகியோர்கள் சேர்ந்து மேற்படி பவர் பத்திரத்தின் அடிப்படையில் குருசாமி என்பவருக்கு 4 செண்டும், 22.04.1998 ம் தேதி திருப்பதி சாந்தி என்பவருக்கு 6 செண்டும் கியைரம் கொடுத்திருக்கிறார்கள் என்றால் சரிதான். ஆனால் அந்த சொத்திற்கும் தாவா சொத்திற்கும் சம்பந்தம் இல்லை. அதன் பிறகு மேற்படி குருசாமி மற்றும் திருப்பதி சாந்தி ஆகியோர் கடந்த 01.07.2008 ம் தேதி அவரவர் கிரையம் வாங்கிய சொத்துக்களை பொறுத்து தனித்தனியாக 2 பவர் பத்திரங்களை எழுதி கொடுத்திருக்கிறார்கள் என்றால் சரிதான். அதன் பிறகும் பிரதிவாதி கணவர் கிரையம் பெற்றுள்ள சொத்துக்களை பொறுத்து பல பதிவுகள் செய்யயப்பட்டுள்ளது என்றால் சரிதான். பிரதிவாதியின் கணவர் கடந்த 11.02.2015 ம் தேதி இறந்துவிட்டார் என்றால் தேதி சரியாக தெரியாது, ஆனால் இறந்துவிட்டார்.

8) பிரதிவாதி அவர் கணவர் கிரையம் வாங்கிய இடத்தில் வீடு கட்டி குடியிருந்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல, வாதிகளின் இடத்தில் தான் அவர் வீடு கட்டி குடியிருந்து வருகிறார். பிரதிவாதியின் கணவர் இறந்தபிறகு பிரதிவாதி மற்றும் அவரது பெண் மக்கள் சேர்ந்து அவரது மகனான ரஞ்சித்குமார் என்வருக்கு கடந்த 23.08.2018 ம் தேதி தானசெட்டில்மெண்ட் பத்திரம் எழுதி கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான், அந்த சொத்திற்கும் வாதிகளின் சொத்திற்கும் சம்பந்தம் இல்லை. பிரதிவாதிகள் கிரையம் பெற்று அனுபவம் செய்து வரும் சொத்துக்களை தான் நான் வாதிகளின் சொத்து என்று உரிமை கொண்டாடி வருகிறோம் என்று சொன்னால் சரியல்ல. நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்யப்பட்டு அவர் தாவாசொத்தை ஆய்வு செய்து அறிக்கை, வரைபடம் தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான்.

9) IA.No.3/25 என்ற மனுவில் ஏற்பட்ட உத்தரவு என்ன என்று எனக்கு தெரியும். மேற்படி உத்தரவின் பேரில் நீதிமன்ற ஆணையர் எங்களுக்கு அறிவிப்பு அனுப்பி சர்வேயர், கிராம நிர்வாக அலுவலர் ஆகியோரோடு வந்து எங்கள் முன்னிலையில் அளந்தார்கள் என்றால் சரிதான். மேற்படி உத்தரவில் இருதரப்பு ஆவணங்களையும் பரிசீலனை செய்து அறிக்கை தாக்கல் செய்யும்படி நீதிமன்ற ஆணையருக்கு உத்தரவு வழங்கப்பட்டது என்றால் சரிதான். அந்த உத்தரவின் பேரில் நீதிமன்ற இருதரப்பு ஆவணங்களையும் பரிசீலனை செய்து தாவா இடத்தை அளந்தார்கள் என்று சொன்னால் சரியல்ல, எங்கள் தரப்பு ஆவணத்தை பார்க்கவில்லை. மேற்படி அளவை பணியின்போது நானும், எனது தரப்பு வழக்கறிஞரும், அவரது உதவி

வழக்கறிஞரும் உடன் இருந்தோம் என்றால் சரிதான்.

10) நான் சொல்வதுபோல் எங்கள் தரப்பு ஆவணத்தை நீதிமன்ற ஆணையர் பார்க்காமல் இருந்தார், எனது வழக்கறிஞர் அந்த இடத்திலேயே ஏதேனும் மெமோ கொடுத்திருப்பார் அல்லது அளப்பதற்கு ஆட்சேபணை தெரிவித்திருப்பார் என்று சொன்னால் நீதிமன்ற அறிக்கையை பார்த்த பிறகு தான் எனக்கு இந்த விபரம் தெரியும். நான் சொல்வது பொய் என்றாலும் சர்வேயர் உரிய முறைப்படி இருதரப்பு ஆவணங்களையும் பார்த்த பிறகு தான் அளவீடு செய்தார் என்றால் சரியல்ல. எனது தரப்பு வழக்கறிஞர் ஆவணத்தை கொடுத்திருப்பார், ஆ னால் நீதிமன்ற ஆணையர் அதை பரிசீலனை செய்யாமல் அறிக்கையை தாக்கல் செய்துள்ளார். நீதிமன்ற ஆணையரின் அறிக்கையோடு சர்வேயரின் அறிக்கை வரைபடம் இருந்தது என்று சொன்னால் சரிதான்.

**குறுக்குவிசாரணை தொடர்ச்சிக்காக 13.10.2025 ம் தேதி ஒத்திவைக்கப்படுகிறது.**

Taken down by me/before me in open court on 08.10.2025 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.

E SUGANTHAN

Digitally signed by E SUGANTHAN
Date: 2025.10.08 18:06:52 +0530

District Munsif,
Aundipatti.